ஜனவிநோதினி.

இல. 9.] செப்டெம்பர்௴ 1876. [புஸ்த. VII.

நார்வே தேசம்.

நார்வேயென்று நோர்த்தியான நாடொன்று உளதென்று நெடுநாளாய்த் தெரிந்திருந்தும், இந்தப் பிரகிருதியிலுண்டான அதிசயங்களையறியவிரும்பினவர்களுக்கு அதைப் போய்ப் பார்க்கவேண்டுமென்னும் அவா உண்டாகிக் கொஞ்சகாலந்தானாயிற்று. அந்தத்தேசம் இன்னும்அநேகமாய்ஒருவருக்குந்தெரியாது. மேலும்இதைப்போல் பார்ப்பவர்களுக்குப் பலவிதமான அழகையும் காட்டி நன்றாய்த் திருப்திசெய்யத்தக்க வேறொரு தேசமுமில்லை. இங்கிலிஷ்காரருக்குச் சுதேசம்போலிருப்பது நார்வே ஒன்றுதான். ஆதியில் இங்கிலாந்துக்கும் நார்வேய்க்கும் அநேகமாய்ச் சம்பந்தம் நெருங்கியிருந்தது. வரவர காலக்கிரமத்தினாலும்ராஜாங்கத்திலுண்டான வேறுபாடுகளினாலும் அந்தச் சம்பந்தம் நீங்கிப்போயிற்று. இப்படி முன்னொரு காலத்திலிருந்த நெருங்கிய சம்பந்தத்தை அங்கிலேயர் மறந்துபோயினர். நார்வேதேசத்தாரோ அதைச் சரித்திரங்களில் எழுதிவைத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தத் தேசத்தில் அதற்கு அநேகம் அடையாளங்களும் காணப்படுகின்றன. இங்கிலாந்துக்குச் சிறப்புண்டானகாலங்களில் நார்வேயில் ஒருவிசேஷமுமுண்டாகவில்லை. இங்கிலாந்து ஐசுவரியத்திலும் பலத்திலும் பெருகப்பெருக நார்வே பூர்வஸ்திதியிலேயே நின்றது. அத்தேசத்தார் பூர்வத்தில் ஐரோப்பாமுழுதும் படையெடுத்திருந்தார்கள். கொலம்பஸ் ஒருவரும் அறியாத கடல்களில் யாத்திரைசெய்வதற்கு ஒரு நூற்றாண்டுமுன்னமே இத்தேசத்தார் அமெரிக்காவைக் கண்டுபிடித்தார்கள். அவ்வளவு தைரியசாலிகளான நார்வேதேசத்தார் கடைசியில் அயல்ராஜாங்கத்துக்குக் கீழ்ப்படியும்படியாயிற்று. அத்தேசத்து வர்த்தகத்தைத் தேசாந்தரத்தார் கைக்கொண்டார்கள். அத்தேசத்து ஐசுவரியத்தால் டென்மார்க்குதேசத்தார் தனிகரானார்கள். சண்டைகள்

அத்தேசத்தை அழிக்க ஆரம்பித்தன. கொள்ளைநோய்களும் பஞ்சமும் அந்தக் காரியத்தை நன்றாய்ப் பூர்த்திசெய்தன. செழித்துக் குடிகளடர்ந்த இடங்களெல்லாம், குடிகளழிந்து புலிகாடிமுதலிய வைகள் நிர்ப்பயமாய்த் திரியத் தலைப்பட்டன. அத்தேசத்தார் உற்சாகமெல்லாம் அடங்கிப்போயின. இவ்வாறு நானூறுவருடங்களுக்குமேலாய் அத்தேசம் சீர்குலைந்து அடங்கிக்கிடந்தது.

வெகுநாள்வரையில் நார்வே ஈனஸ்திதியிலேயே நின்றது. இந்த 19-ம் நூற்றாண்டின் முதலிலேதான் அதற்கு நல்லகாலம் பிறந்தது. 1814-ம் வருஷத்திலே அது சுவாதீனம்பெற்றது. அதுமுதல் செல்வமும் வளமும் நாளுக்குநாள் அதிகமாய் வளரத்தலைப்பட்டது. அத்தேசத்துப் பிரதான நகரத்தின் குடிவளம் இரட்டித்தது. வர்த்தகம் ஒன்றுக்கு நூறுபங்காயிற்று. பாதைகள் ஏற்படுத்தப்பட்டன. கனிகள் கண்டுபிடிக்கப்பட்டன. அத்தேசமெங்கும் தொழிற்சாலைகள் கட்டப்பட்டன. நல்ல அரசாட்சியின் சீர்மையால் அத்தேசம் வசவர உயர்ந்த ஸ்திதிக்குவந்தது. இப்போது காடுகளும் மீன்பிடிக்கும் துறைகளுமே அத்தேசத்துச் செல்வவிளைவுக்கு மூலாதாரமாயிருக்கின்றன. அத்தேசத்தில் தாதுவர்க்கங்கள் எண்ணிறந்தவை. உலகத்துள் அத்தேசத்தைச் சிறந்த செல்வநாடாக்குவதற்கு நிலக்கரியொன்றுதான் குறைவு.

நார்வே சரித்திரங்களாலும் வம்சபரம்பரைகளாலும் இங்கிலாந்தோடு நெருங்கிச் சம்பந்தப்பட்டிருப்பதால், அதனிடத்தில் அங்கிலேயருக்கு அதிக விருப்பமுண்டென்பதுமாத்திரமேயல்ல, இயற்கையாய் அத்தேசத்திலுள்ள அழகைப்பார்த்தால் அனைவரும் அதிசயப்படுவார்கள். 1,22,000 சதுரமைலுள்ள தேசத்தில் 1,100 மைல் அளவுமாத்திரம் வேளாண்மைசெய்யப்பட்டுவருகிறதென்பதைக் கேட்டமாத்திரத்திலேயே அது காடுமலைகள் நிறைந்தநாடென்று யாவர்க்கும் நன்றாய்ப் புலப்படும். வடமுனைதொடங்கி ஒரு பெருமலைத்தொடர் அத்தேசத்தை யூடுருவிச்செல்லுகின்றது. குறுகி ஆழ்ந்த அநேகம் கணவாய்களும், அதன் பக்கங்களில் அடர்ந்த மாச்சாலைகளும், அடிப்புறங்களில் அகாதமான மடுக்களுமாய் எங்கும் அம்மலைத்தொடர் நிறைந்துகிடக்கின்றன. நார்வே விநோதக்காட்சிகள் நிறைந்தவிடமென்ற பெருமை அத்தேசத்தினுட்புறங்களுக்குமாத்திரமேயல்ல; அதன் உள்நாடுகள் அழகிற்சிறந்தனவாயினும் மேலண்டைக் கடற்கரையிலுள்ள விநோதங்களைப் பார்த்தால் அவை அற்பமாய்த்தோன்றும். அவ்விடத்தில் கொடிமுடிகள் எப்போதும் பனிமூடியிருக்கும்படி அவ்வளவு உயரமான மலைகளில்லை. சுமார் 9,000 அடியுள்ள மலைகள் சிலவுள. ஆயினும் அம்மேலண்டைக்கரைக்கு அவ்வளவு வியக்கத்தக்க தோற்றமுண்டானதெல்லாம் அங்குள்ள காலுறுகளாலேதான்.

அக்காறுகள் அதிக அழகுள்ளவை. ஒவ்வோரிடங்களில் இருபது மைலுக்கதிகமாய்ப் பிரவகிக்கும். சிலவிடங்களில் விசாலமாய்ப் பரவியோடும். சிலவிடங்களில் மரங்களடர்ந்த திட்டுகளாலும் மலைகளாலும் குறுக்கே தடைபட்டு அதன் பக்கமாய்க் குறுகியோடும். சிலவிடங்களில் சுமார் 4000, 5000 அடி உயரமுள்ள மலைகளின் கணவாய்களில், மேலே அருவிகள் களகளவென்று முழக்கத்தோடு விழ, அநேகங்காறுகள் இருண்டு பயங்கரமாயோடுவதுண்டு. அதனழகு ஒருவாறு புலப்படுமாறு ஒரு படத்தை இச்சஞ்சிகையுடன் சேர்த்தனுப்பியிருக்கிறோம்.

ஒரு கொல்லன்பிள்ளை கதை.

எழுபது எழுபத்தைந்து வருஷத்துக்குமுன் லண்டன் பட்டணத்தில் ஒரு கொல்லன் இருந்தான். அவன் தேர்ந்த வேலைக்காரன். அவனுக்கு மூன்று பிள்ளைகள் இருந்தன. அவர்களுள் கடைப்பிள்ளைக்கு மைகேல் பாரடே என்று பெயர். அவன் பிறந்தது 1791-௵ செப்டம்பர்௴ 22௳. தகப்பன் தரித்திரனாகவும் துர்ப்பலனாகவும் இருந்தபோதிலும், தன் பிள்ளைகளெல்லாம் தேவபக்தியும் நன்முயற்சியும் உடையவர்களாயிருக்கவேண்டுமென்று கூடியவரையில் பிரயாசைப்பட்டுவந்தான். மைகேல் பாரடே என்பவன் சிறுவயதில் லண்டன் பட்டணத்தில் தெருவில் தன் தங்கையை அருகில்வைத்து விளையாடித்திரிகையில் அவனைக் கண்ட ஒருவரும் அவனைக் கவனித்திருக்கமாட்டார்கள். பாலியத்தில் கூட புதிதான சங்கதிகளைத் தெரிந்துகொள்வதில் மிகவும் விருப்பமுள்ளவனாயிருந்தான். ஒரு சாதாரண பள்ளிக்கூடத்துக்குப் போய் முதற்பாட புஸ்தகம் வாசித்துவருவான். இந்தச் சிறுபையன் பெரியவனானபின்பு விசேஷமான காரியங்களைச் செய்ய வல்லவனாவானென்றாவது, பெரியவர்களாலும் விவேகிகளாலும் நற்குண நற்செய்கை உடைய பிரபுக்களாலும் மரியாதைபெற்றுப் பாகதியடைவானென்றாவது அக்காலத்தில் அவனைப் பார்த்தவர் ஒருவரும் எள்ளளவும் எண்ணியிருக்கமாட்டார்கள். ஆயினும் பின்னிட்டு இவ்வண்ணமே நடந்தது. ஆகையால் அவனுடைய சரித்திரத்தையும், அவன் முன்னுக்கு வந்த விதத்தையும், அவனால் உலகத்துக்குண்டான நன்மையையும் கீழே ஒருவாறு சொல்லுவோம்.

தாய்தந்தையர்கள் தரித்திரர்களாதலால் பாரடே என்பவன் பாலியத்திலேயே கூலிக்கு வேலைசெய்யவேண்டியதாய் நேரிட்டது.

லண்டன்பட்டணத்தில் அவன் வீட்டுக்குச் சமீபத்தில் ஒரு புத்தகக்கடை இருந்தது. அதற்கு எஜமானன் மிகவும் விவேகி. சோதிடத்தில் அவருக்குப் பிரியமிருந்ததாகச் சொல்லுவார்கள். அவரிடத்தில் பதின்மூன்றாவது வயதில் பாரடே கூலியாளாக அமர்ந்தான். சமாசாரபத்திரிகைகளைப் பட்டணத்தில் அங்கங்கே இருந்த கையொப்பக்காரருக்குக் கொண்டுபோய்க் காட்டிவருவது அவனுடைய வேலை. ஆதலால் அவன் நாடோறும் தொலைதூரம் நடக்கவேண்டியதாயிற்று. வருத்தமான வேலையானபோதிலும் அதை மனதோடு செய்துவந்தான். இவ்விதமாக ஒருவருஷம் உழைத்தபின்பு அவனுக்குப் பணமின்றி வேலை கற்றுக்கொடுப்பதாகப் புத்தகவியாபாரி ஏற்றுக்கொண்டார்.

புத்தகக்கடையில் வேலை கற்றுக்கொள்ளுகிறவர்கள் அங்கிருக்கும் புத்தகங்களை உள்ளும் புறமும் பார்ப்பதற்குக் கூடும். பாரடே என்பவனும் அங்கிருந்த சில புத்தகங்களை வாசித்தான். ரசாயன சாத்திரத்தையும், மின்சாரத்தைப்பற்றிய சில நூலையும் முதலில்படித்தான். எழுதியிருக்கிறதை வாசித்தமாத்திரத்தில் அவன் திருப்தியடைகிறதில்லை. ஏட்டுச்சுரைக்காய் கறிக்காகாது, வாசித்தவைகளை அநுபோகத்தில் கண்டறிவது அவன் வழக்கம். அதற்காக ஒவ்வொருவாரமும் சிறிது பணம்செலவுசெய்து ரசாயனசாஸ்திரத்தில் சொல்லியதைப் பரீக்ஷைசெய்துபார்ப்பான். இதின்பொருட்டுச் சில இயந்திரமும் செய்தான்.

தனக்கு அப்போதைக்கப்போது தோன்றின சாத்திரக் குறிப்புகளை ஒரு புத்தகத்தில் எழுதிவருவான். அக்காலத்தில் பதிப்பித்துவந்த சாத்திரவிசாரணைப் பத்திரிகைகளில் புதிதான சங்கதிகளிருக்குமானால் அவற்றையும் தன் புத்தகத்தில் குறித்துவைப்பதுண்டு. இப்புத்தகம் வாசிப்பவர்களுக்கு வினோதமாகவும் பிரயோஜனமுடையதாகவும் இருந்தது.

1810-ஆுதில் ஒருநாட் காலையில் அவன் உலர்த்திவரும்போது ஒரு கடையின் ஜன்னலின்மேல் ஒரு விளம்பரத்தைப் பார்த்தான். அதை வாசித்தபோது ஒருவர் சாத்திரப்பிரசங்கம் செய்யப்போகிறதாகவும் கேட்கிறவர்கள் ஆளுக்கு அரை ரூபாய் வீதம் கொடுக்கவேண்டுமென்றும் அதில் கண்டிருந்தது. இதைப் பார்த்தவுடனே பிரசங்கத்தைக் கேட்க விருப்பமுண்டாயிற்று. எஜமானனும் உத்தரவுகொடுத்தார். ஆனால் பணத்துக்கு வழியில்லை; அவனுடைய தமயன் ஒருவன் கொல்லன்வேலை செய்துவந்தான். அவனிடத்திலிருந்து பணம்வாங்கிப் பிரசங்கத்தைக் கேட்டான். பிரசங்கம் கேட்டதுமாத்திரம் அல்ல, அந்தச் சாலையில் வந்திருந்த சிலருடைய சிநேகமும் உண்டாயிற்று. இந்தச் சிநேகிதர்களோடு சாத்திரவிஷயமான சம்பாஷணைசெய்து அவர்களுக்கு அவ்விஷயமான கடிதங்களும் எழுதிவந்தான்.

அந்தக் கடிதமெல்லாம் பிற்காலத்தில் ஒன்றாகச் சேர்த்து அச்சிற் பதிப்பிக்கப்பட்டது. அக்கடிதங்களை வாசித்துப்பார்க்கும்போது அவற்றை எழுதினவன் பெரிய மனுஷனாகவும், சாஸ்திரியாகவும் இருந்திருக்கவேண்டுமென்றும், சாதாரணமான புத்தகக்கடையில் வேலைகற்றுக்கொள்ளுகிற ஒருவன் அவைகளை எழுதுவது அசாத்தியமென்றும் நன்றாய்த் தெரியவரும்.

பாரடே என்பவன் முதல் முதல் தன் சமையல் வீட்டில் சாத்திரபரீக்ஷை செய்ததாகவும், அங்கிருக்கிற மேசைமேல் நின்று சாத்திரபிரசங்கம் செய்ததாகவும் கேள்வி. அக்காலத்தில் அவன் செய்த மின்சார இயந்திரம் பின்னிட்டு ஒரு பிரபுவுக்குக் கிடைத்தது. இப்போது அதைச் சாத்திர விநோதசாலையில் காணலாம்.

அவன் பிரசங்கம் கேட்கும்போது விசேஷமான சங்கதிகளைக் குறித்துக்கொண்டு வீட்டுக்கு வந்தபின்பு அவைகளை விவரமாக எழுதிவைப்பது வழக்கம். அவன் பார்த்த பரீக்ஷைகளைக் கணக்கிட்டுத் தெளிவாக ஒன்றும் விடாமல் எழுதிவருவான். மேற்படி பரீக்ஷைகளில் இயந்திரங்களாவது வேறுசூஸ்திரங்களாவது எடுத்துக் காண்பிக்கப்பட்டால் அவைகளையும் தன் புத்தகத்தில் படமாக எழுதிவைப்பான். பின்னிட்டு இக்குறிப்புகளையெல்லாம் சேர்த்து நான்கு புத்தகங்களாக அட்டவணை சகிதமாய்ப் பதிப்பித்தான்.

இப்படியிருக்கையில், அவன் எஜமானன் வீட்டில் ஒரு பிராஞ்சுக்காரன் வந்து இறங்கியிருந்தான். அவன் சித்திரவேலையில் தேர்ப்பற்றவன். பிராஞ்சுதேசத்தை ஆண்ட ராஜசிரோமணியாகிய நப்போலியனுடைய படத்துக்கு வருணம்வைத்துக் கீர்த்திபெற்றவன். அந்தத் தேசத்தில் முதலில் மகா கலகம் உண்டானபோது அங்கிருந்து உயிர் தப்பியவர்களுள் ஒருவன். இப்போது லண்டன் நகரத்தில் குடியிருக்க வந்திருந்தான், புத்தகவியாபாரியின் வீட்டிலிருக்கையில் வேலைகற்றுக்கொண்டிருந்த பாரடே என்பவனுடைய புத்திசாதுரியத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டு, அவனுக்குத் தன் புத்தகங்களைக் கடனாகக் கொடுத்துச் சித்திரவேலையும் கற்றுக்கொடுத்தான்.

மேலே சொல்லிய பிரசங்கம்தவிர வேறு சிலவற்றையும் பாரடே கேட்டுவந்தான். லண்டன்நகரத்தில் ஒரு பெரிய சாத்திரசாலையிருக்கின்றது. வயதுசென்ற சாஸ்திரிகள் அங்கே போகிறது வழக்கம். பெரும்பாலும் வெள்ளிக்கிழமை சாயந்திரம் அங்கே அநேகம்பேரைக் காணலாம். தெருவில் வண்டிகள் நிறைந்திருக்கும். துரைகளும் துரைசானிகளும் பற்பல இடங்களிலிருந்து வந்து சேருவார்கள். அந்தச் சாலைக்குள் பிரவேசித்தபோது எதி

சில் ஒரு கூடம் இருக்கும். அதின் மத்தியில் ஒரு பெரிய படி இருக்கும். அது கருங்கல்லால் கட்டியது. கூடத்தின் இருபுறத்திலும் அறைகள் உண்டு. அந்த அறைகளில் சுவர் தெரியாமல் கணக்கில்லாத புத்தகங்கள் அடுக்கியிருக்கும். மேசையின்மேல் அக்காலத்துச் சாத்திரபத்திரிகைகள் பரப்பியிருக்கும். நாளுவிதமான இயந்திரங்களைக் காணலாம். சாத்திரபரீக்ஷைக்கு வேண்டிய அரும் பொருள்களும் அங்கே வைத்திருப்பார்கள். படியின்மேலேறி வலதுகைப்பக்கமாய்த் திரும்பினால் பிரசங்கசாலை காணப்படும். அங்கே பெரிய மேசை ஒன்றிருக்கின்றது. அது லாடத்தைப்போலிருக்கும். பரீக்ஷைக்கு ஏற்றதாய்ச் செய்யப்பட்டு இருக்கிற அந்த மேசைக்குப் பின்புறத்தில் உலைக்களமும் கறுப்பு நிறமான பலகையும் இருக்கும். மேசையைச் சுற்றி உட்காருவதற்கு வரிசை வரிசையாக நாற்காலி போட்டிருக்கும். ஏறக்குறைய எழுநூறுபேர் இருப்பதற்குப் போதுமான இடமிருக்கின்றது. மெத்தையின் கீழே ரசாயனசாத்திர பரீக்ஷைசாலை ஒன்றுண்டு. அதில் இப்போது தேவையாயுள்ள சகல கருவிகளையும் காணலாம். அந்தக் கட்டடத்திலேயே ஒரு இடத்தில் அதற்கு அதிகாரி குடியிருக்கிறார். தெரியாதவற்றைத் தெரிந்துகொள்ளவும், புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்டு உபயோகமுடையதாகிய சகலத்தையும் ஜனங்கள் எளிதில் அறிந்துகொள்ளவும், நெடுகிலும் செய்துவரும் பிரசங்கத்திலும் செய்து காட்டுகிற பரீக்ஷையிலும் சாத்திரத்தில் சொல்லிய உண்மைகளை அனுபவத்தில் கண்டறியும்பொருட்டும் மேற்படி சாலை கட்டப்பட்டது.

பாரடே வேலைகற்றுவந்த புத்தகக்கடையில் ஒரு துரை வந்து போவதுண்டு. அவர் மேலே விவகரித்த சங்கத்தை அபிமானித்தவர்களுள் ஒருவர். அக்காலத்தில் டேவி என்ற பெயர்பெற்ற ஒரு சாஸ்திரி அந்தச் சங்கத்தில் பிரசங்கம்செய்துவந்தார். கடைசியில் செய்த நாலு பிரசங்கத்துக்குக் கடைக்கு வந்து போய்க்கொண்டிருந்த துரை பாரடே என்பவனை அழைத்துக்கொண்டுபோனார். பாரடே சங்கத்துக்குப்போய் அங்கே படிப்படியாகக் கட்டியிருந்த இருப்பில் உட்கார்ந்து கவனமாகப் பிரசங்கத்தைக் கேட்டுப் பரீக்ஷைகளையும் பார்த்துவந்தான். பின்பு அந்தப் பிரசங்கமெல்லாவற்றையும் தெளிவாயும் திருத்தமாயும் ஒரு புத்தகத்தில் எழுதி அவற்றை விளக்கும்பொருட்டுப் படங்களையும் எழுதி அவைகளுக்கெல்லாம் ஒரு அட்டவணையும் ஏற்படுத்தினான்.

வேலைகற்று ஆனவுடன் புத்தகங்களைக் கட்டுகிற தொழிலில் அமர்ந்தான். அவனுடைய எஜமானன் ஒரு பிராஞ்சுக்காரன். லண்டன் நகரத்தில் குடியிருக்கவந்தவன். அவன் நல்ல குணமுடையவனல்லன்; ஆதலால் பாரடே அதிகத் துக்கப்பட்டான்.

சிலநாளானபின்பு டேவி என்ற சாத்திரியார் ஒருவகையான ரசத்தின் குணத்தைப் பரிசோதனை செய்துவந்தார். அந்த ரசம் மிகவும் கொடியது. கொஞ்சம் தவறினால் திடீரென்று வெடிக்கும். அப்படி ஒருதரம் வெடித்து அவருடைய கண்ணுக்குச் சேதம் உண்டாயிற்று. பின்பு அதினால் உண்டான வருத்தம் அதிகம். சிறிதுகாலம் அவர் தானாக எழுதக்கூடவில்லை. அப்போது அவர் சொல்லியதை எழுதுவதற்கு பாரடே என்பவனை நியமித்தார். இவ்வேலையில் பாரடே இருந்தது கொஞ்சகாலம்தான். வியாபாரம் செய்வதற்கு அவன் பிரியப்படவில்லை. வியாபாரம் தற்பொழிவிலேயே நாட்டமுடையதென்றும், சன்மார்க்கமல்லவென்றும் அதை வெறுத்தான். சாத்திரவிசாரணை செய்யவேண்டுமென்பதே அவனுடைய முக்கியமான கருத்து. சாத்திரவிசாரணை செய்கிறவர்கள் சிநேகத்துக்குப் பாத்திரமாகிறார்கள் என்றும், அவர்களிடத்தில் தயை விசேஷமாயிருக்குமென்றும் எண்ணி அவ்விஷயத்தில் நோக்கமாயிருந்தான். அவனுடைய எண்ணம் இவ்விதமாக இருக்கிறதாகவும், தகுந்த சமயம் வாய்த்தால் யாதாமொரு உபகாரம் செய்யவேண்டுமென்றும் டேவி என்னும் சாத்திரிக்கு ஒரு கடிதம் எழுதினான். கடிதத்தோடு அவர் பிரசங்கத்திலிருந்தெடுத்த குறிப்புகளையும் அவர் பார்வைக்கு அனுப்பினான். கடிதத்தைப் பார்த்துக்கொண்டு டேவி என்பவர் தன் சிநேகிதர் ஒருவரிடத்துக்குப் போனார். அந்தச் சிநேகிதர் மேற்சொல்லிய சங்கத்திலிருந்த இயந்திரங்களை மேற்பார்வை பார்க்கிறவர். அதற்காக அவர் சம்பளம் வாங்குவதில்லை. பெருமையின்பொருட்டு வேலைபார்த்துவந்தார். அவரைப்பார்த்து டேவி என்பவர் சிநேகிதரே! பாரடே என்கிற ஒரு வாலிபனிடத்திலிருந்து இதோ ஒரு கடிதம் வந்திருக்கின்றது; அவன் என் பிரசங்கத்தைக் கேட்டிருக்கிறான்; சங்கத்தில் தனக்கு ஒரு வேலை கொடுக்கும்படியாகக் கேட்கிறான்; அதற்கு நான் என்னசெய்வேன் என்று கேட்டான். அவனைப் புட்டிகளைக் கழுவும்படியாக வேலையிடு; அவன் வேலைசெய்கிறவனானால் உடனே அதைச் செய்வான்; மறுப்பானானால் ஒன்றுக்கும் உதவயாட்டான் என்று சிநேகிதர் சொன்னார். அப்படியல்ல, வேறு நல்லவேலை கொடுத்துப்பார்க்கவேண்டுமென்று டேவி என்பவர் மறுபடியும் சொன்னார். இப்படிப் பேசி ஆனபின்பு டேவி என்பவர் பாரடே என்னும் வாலிபனுக்குப் பக்ஷமான கடிதம் எழுதி அவனையும் நேராகக் கண்டுபேசினார். அப்போது பார்த்துவந்த வேலையை விடாமலிருக்கும்படிக்கும், சாத்திரவிசாரணையால் விசேஷ திரவியலாபம் உண்டாகாதென்றும் அவனுக்குச் சொன்னார். தன்னிடத்திலும் சங்கத்திலும் வருகிற வேலையைக் கொடுப்பதாகவும் உறுதிமொழி கூறினார்.

கொஞ்சக்காலத்துக்குள் மேற்சொல்லிய சங்கத்துப் பரீக்ஷைசாலையிலிருந்த வேலைக்காரனைக் கெட்டநடத்தைக்காகத் தள்ளிவிட்டார்கள். பின்பு ஒருநாள் இரவில் ஒரு பெரியவண்டி பாரடேயினுடைய வீட்டுக்கு எதிரில் வந்துநின்றது. அதிலிருந்த வேலைக்காரன் டேவி என்பவர் கொடுத்த ஒரு கடிதத்தைக் கொண்டுவந்து கொடுத்துத் திரும்பிப்போனான். அத்தெருவாருக்கெல்லாம் இதைப்பார்க்க ஆச்சரியமுண்டாயிற்று. மறுநாள் காலையில் பாரடே சாத்திரியாரைப் போய்ப்பார்த்தான். பார்த்தபின்பு தனக்கு உதவியாக அவனை நியமித்தார். வாரமொன்றுக்குச் சம்பளம் 12½ ரூ. அவன் இருக்கிறதற்குச் சாலையில் ஒரு வீடும் விட்டார்கள். பண்டிதர்களுக்கும் பிரசங்கம் செய்பவர்களுக்கும் பிரசங்கம் செய்கிறகாலத்திலும் அதற்கு முன்னும் வேண்டிய உதவிசெய்யவேண்டும். கருவிகளாவது இயந்திரங்களாவது பிரசங்கசாலையில் வேண்டியிருந்தால் அவற்றை அவைகளுடைய இருப்பிடத்திலிருந்து ஜாக்கிரதையாகக் கொண்டுவரவேண்டும். அவற்றின் வேலைமுடிந்தபின்பு அவைகளை நன்றாய்க் கழுவித் துடைத்து முன்னிருந்த இடத்தில் கொண்டுபோய் வைக்கவேண்டும். அவற்றில் ஏதாவது கெட்டுப்போயிருந்தால் அதைச் செப்பனிடுவதற்குச் சபையாருக்குத் தெரிவிக்கவேண்டும். இவற்றையெல்லாம் ஒரு புத்தகத்தில் குறித்துவரவேண்டும். வாரத்துக்கொருதரம் வெளியிலிருக்கும் கருவிகளையும் மாதத்துக்கொருதரம் கண்ணாடிப் பெட்டிக்குள்ளிருக்கும் கருவிகளையும் துடைத்துவைக்கவேண்டும். இவைகள்தான் பாரடே என்பவனுடைய வேலை.

அவன் மேலே சொன்ன கைவேலையைமாத்திரம் செய்யவில்லை. அங்கே இருந்த தாதுவர்க்கங்களையெல்லாம் கிரமமாக வைத்தான். இவ்வாறாக ஆதிமுதல் மேலான அந்தஸ்திலேயே இருந்தான்.

சில நாளைக்குள் ஒருவிதமான கிழங்கிலிருந்து சர்க்கரை எடுத்தான். அவன் செய்த வேலையெல்லாம் இப்படி மனதுக்கிசைந்ததாயிருக்கவில்லை. ஒருநாள் கரியையும் கெந்தகத்தையும் சேர்த்து உருக்கினான். அது அதிக நாற்றமெடுத்தது. டேவி என்பவர் வெடிக்கிற சில பதார்த்தங்களைப் பரீக்ஷைசெய்துவந்தார். அவைகள் வெடித்தபோது அருகிலிருந்த பாரடே என்னும் வாலிபனுக்கு அபாயம் உண்டாயிற்று. ஒன்றரை மாதத்துக்குள் இப்படி நாலுதரம் நடந்தது. டேவி என்பவர் ஒருநாள் ஒரு ரசத்தை உருக்கினார். அப்போது அங்கிருந்தவரெல்லாம் அது வெடிக்குமென்று எண்ணி முகத்துக்குக் கண்ணாடியால் மூடுபோட்டுக்கொண்டிருந்தார்கள்; ஆயினும் சேதம் உண்டாயிற்று. ஒருநாள் பரீக்ஷை நடக்கும்போது பாரடே தன் கையில் ஒரு குழாய்வைத்திருந்தான். அதற்குள் மேலே சொல்லிய ரசம் கொஞ்சம் இருந்தது. குழாயின்

எங்கெங்கே பிராணனிருக்கின்றதோ அங்கங்கே சூடு இருக்கிற தென்பதற்கு நியாயம் என்னவோ தெளிவாய்த் தெரியவில்லை. ஆனால் ஒன்று, சுவாஸவாயு, எரிகருவியோடுசேர்ந்து நெருப்பின் சூட்டை உண்டாக்குவதுபோல், நமது ரக்தத்தோடுசேர்ந்து சரீரச் சூட்டை உண்டாக்குவதாய்த் தோன்றுகின்றது. ஆதலால் சரீரச் சூடானது நாம் உட்கொள்ளுகிற காற்றினாலும், ரக்தமாக மாறுகிற நமது உணவினாலும் உண்டாகின்றது. அந்தச் சூடு ரக்தத்தைப் பற்றியதாதலால் ரக்தம் அதை தேகமெங்கும் பாவச்செய் கிறது. நாம் இறக்குங்காலத்தில் சுவாஸவாயு ரக்தத்தோடு கூடு வது நின்றுபோய் ரக்தத்தின் ஓட்டமும் நின்றுபோகிறபடியால் சரீரமெங்கும் சயித்தியம் வந்து கோத்துக்கொள்ளுகிறது.

அதனால் நமது சரீரத்தில் குளிரெடுத்தால் அது மேல்தோலுக்கு மாத்திரந்தான்; உட்புறத்தில் குளிர் எடாது. ஏனெனில் சரீரச் சூடு எப்போதும் ஒரு ரீதிதான். நாம் நெருப்பண்டை உட்கார்ந்து சரீரத்தைச் சூடாக்கினால் அது நமது உடம்பின் மேற்புறத்தைச் சூடாக்குமேயன்றி, உட்புறத்திலுள்ள ரக்தத்தைச் சிறிதும் சூடாக் கமாட்டாது. குளிர்ந்த தடாகத்தில் குளிப்பதனால் குளிர்ச்சியாவது மேற்புறம்மாத்திரந்தான். அதனால் ரக்தம் கொஞ்சமும் குளிர்ச்சி யடையாது. உலைக்கூடமுதலிய நெருப்புச்சாலைகளிலேயே எப்போ தும் வேலைசெய்பவர்களுடைய ரக்தமானது எப்போதும் ஜலத்தி லேயே வசிக்கிற கரையான், முத்துக்குளிப்போர் முதலியவர்களு டைய ரக்தத்தைவிட அதிகமாய்ச் சூடாயிராது.

அப்படியில்லாமல் நமது மேல்தோல்போல் ரக்தமும் சீதமாயும் உஷ்ணமாயும் சமயத்துக்கேற்றபடி மாறுவதாயிருந்தால், எவ்வளவு போர்வைகளிருந்தாலும், எவ்வளவு நெருப்பிருந்தாலும், எவ்வளவு மறைவிடங்களிருந்தாலும் சிறிதுநேரங்கூட நாம் பிழைத்திருக்கமா ளாது. கோடைகாலத்து வெப்பத்தாலும், மழைகாலத்துக் குளிர்ச் சியாலும் நாம் நசித்துப்போகவேண்டும். வீட்டில் பெருத்த தீயி ருந்தாலுஞ்சரி, குளிர்ந்த நீரில் நாம் ஸ்நானஞ்செய்தாலுஞ்சரி, நாம் இறந்துபோகவேண்டிவரும். ஏனென்றால், ரக்தத்தில் வெப்பமாவது குளிர்ச்சியாவது தன்னியற்கைநிலைக்குக் கொஞ்சம் அதிகரித்தால் உடனே மரணமென்று கண்டிருக்கிறார்கள்.

நமது தேகத்தினுள்ளே சில காரணங்களால் ரக்தம் அதிக சீதமா கவும் அதிக உஷ்ணமாகவும் மாறக்கூடும். நோயுண்டானால் அதிக சூடாகின்றது; உணவில்லாமற்போனால் அதிக சீதமாகின்றது. வெளிச்சூட்டை உள்ளே சேரவொட்டாமல் தடுக்கிற சக்தி அதற் குண்டு. அதனால் மனிதர்கள் சமையல்அடுப்பு முதலிய நெருப் புச்சாலைகளண்டையிருந்து தேகத்தின் மேற்புறம் எவ்வளவு சூடாய்ப்போனாலும், ரக்தம்மாத்திரம் ஒருசீராய் இருக்கின்றது.

அப்படியே, மூச்சுக்காற்றுகூடப் பனிக்கட்டியாய்த் தோய்ந்துபோகிற சீததேசங்களில் யாத்திரைசெய்பவருக்கு ரக்தம் பூர்வஸ்திதியிலிருக்கிறதேயன்றி ஒருபோதும் குளிர்ச்சியால் தோய்ந்துபோகிறதில்லை.

வெளிப்புறத்தில் எவ்வளவு சூடிருந்தாலும், எவ்வளவு குளிர்ச்சியிருந்தாலும் ரக்தமாத்திரம் ஒரேநிலையில் இருப்பதனாலேதான், ஜனங்கள் எந்தப் பூமியிலும் எந்தக்காலத்திலும் வாஸம்பண்ணக்கூடியதாயிருக்கிறது. துருவத்திற்கடுத்த தேசங்களில் பனிக்கட்டிகளின் நடுவே வசிப்பவர்களுடைய ரக்தம், நல்ல கோடைகாலத்தில் நமது ரக்தம் எவ்வகையாயிருக்குமோ, அப்படித்தானிருக்கும். பூமிமத்தியத்தில் சூரியனுக்கு நேரே வசிப்பவர்களுடைய ரக்தம் நல்ல மழைகாலத்தில் நமது ரக்தம் எவ்வகையாயிருக்குமோ அப்படித்தான் இருக்கும். மேலும், குளிர்தேசங்களிலும் குளிர்காலங்களிலும் ரக்தத்தின் சூடு கொஞ்சம் அதிகமாகி, ஜனங்கள் வெளிக்குளிரால் அதிக வருத்தப்படாதபடி காக்கிறதென்கிறார்கள்.

சுத்தத்தைப்பற்றி.

சுத்தமென்பது நாகரீகத்துக்கு அடுத்த முக்கியமான லட்சணங்களில் ஒன்று. சுத்தமென்னும் ஆபரணத்தை அணிந்துகொள்ளாமல் நாலுபேர் கூடியிருக்கிற சபைக்கு ஒருவனும் போகக்கூடாதவன்; ஏனென்றால் அது சபையாருக்கு அவமரியாதைபண்ணுகிறதுபோலாகும். இந்த விஷயத்தை ஒப்புக்கொள்ளாதவர் ஒருவருமில்லை. இவ்வுலகத்தில் பற்பல ஜாதியார்களும் தேசத்தார்களும், சாஸ்திரப்பயிற்சியினாலும் வேலைத்திறமையினாலும், மற்ற மேலான காரியங்களினாலும் ஒருவரை ஒருவர் அதிசயிக்க ஆசைப்பட்டுக் கீர்த்தி அடையவேண்டுமென்று எப்படி பாடுபடுகிறார்களோ, அப்படியே சுத்தமென்பதும் பெருமை கொடுக்கத்தகுந்தவைகளில் ஒன்று. நாகரீகம் அதிகமாக அதிகமாக அதற்கு இன்றியமையாத் துணையாகிய இந்த லட்சணமும் ஏற்றமடையும்.

அன்பு என்னும் குழந்தைக்குத் தாய்போல நின்று அதை ஆதரித்துவளர்ப்பது சுத்தம். அன்பு அல்லது விசுவாசத்தை உண்டுபண்ணுவதற்குக் காரணமாயிருப்பது அழகு; அதைப் பிற்பாடு காப்பாற்றி நீடித்திருக்கச்செய்வது சுத்தம். ஒரு பாத்திரம் பழகினதானாலும் பளபளப்பாயும் நேர்த்தியாயுமிருந்தால் அதைப் பார்ப்பது இனிப்பாயிருக்கும்; புதுப்பாத்திரமானாலும் துருப்பிடித்து விகாரமாயிருந்தால் அதைப்பார்க்க வெறுப்புண்டாகும்; அது

போலவே சுத்தமில்லாத சிறுவனைப் பார்ப்பதைவிட சுத்தத்தோடுகூடிய வயதுசென்றவனைப்பார்ப்பது மனதுக்குப் பிடித்திருக்கும்.

நம்மிடத்திலுள்ள சுத்தம் பிறருக்கு நம்மை இஷ்டமாகச்செய்வதுதவிர, நம்முடைய மனதுக்கே ஒரு ரம்மியத்தைக் கொடுக்கும்; வியாதிமுதலிய தீங்கு ஒன்றும் வரவொட்டாமல் காத்துக்கொள்ளும்; அன்றியும் சரீரத்துக்கும் மனதுக்கும் கெடுதியான அநேக துர்க்குணங்கள் அதற்குப் பகையாதலால், அது நிலையாய்க் குடிகொண்டிருக்குமிடத்தில் அவைகள் நெருங்கமாட்டா. சரீரம் சுத்தமாயிருந்தால் மனதுக்கும் சுத்தமுண்டு. தன்னைச் சுற்றிலும் இருக்கிற பொருள்களின் நிறத்தைத் தன்னிடத்தே பதிந்துகொள்ளுவது மனிதனுடைய மனதின் இயல்பு. ஆகையால் நமக்கு அடுத்திருக்கிற பொருள்கள் அழகாயும் சுத்தமாயுமிருந்தால், திவ்வியமான தோற்றங்களும் எண்ணங்களும் உண்டாகி நற்குணங்களும் நற்செய்கைகளும் அமைந்தவர்களாயிருக்கலாம்.

லண்டன்நகரத்தில் வைத்திருக்கும் இந்து தேசத்து விநோதக் காட்சிசாலை.

ஈஸ்டு இந்தியா கம்பெனி என்னும் சங்கத்தார் சென்ற 1857-ம் ௵ வரையில் ஜனங்களுக்கு எவ்விதத்திலும் நன்மையையே பாராட்டிக்கொண்டு வெகு சிறப்புடன் நமது தேசத்தை அரசாண்டுவந்தார்களல்லவா? இப்போது அவ்வரசாட்சி ராஜாங்கத்தைச் சேர்ந்துபோய் சுமார் 20 வருஷம் ஆய்விட்டபோதிலும், ஸாதாரண ஜனங்கள் அநேகமாய் இன்னும் கம்பெனியார் அரசாட்சியென்றே வியவஹரித்துவருகிறார்கள். அவ்வளவு மேன்மையுடன் அவர்கள் அரசாண்டகாலத்தில் அவர்களுக்கு லண்டன் நகரத்தில் லீடன் ஹால் என்னும் தெருவில் உத்தியோகசாலை ஒன்றிருந்தது. இப்போது அந்தச் சாலை அழிந்துபோயிருந்தாலும், அது சிறப்புற்றிருந்தகாலத்தில் இவ்விந்தியாவிலுள்ள விநோதங்களைக் கொண்டுவைப்பதற்காகவே அதில் சில அறைகள் கட்டிவைத்திருந்தன. இத்தேசத்திற்கு வந்திருந்த கம்பெனி உத்தியோகஸ்தர் அநேகர் தங்களுக்குக் கிடைத்த இத்தேசத்துச் சிறந்த மாதிரிகளைக் கொண்டுபோய் அதிகாரிகளுக்குக் கொடுத்தார்கள். சுதேச ராஜாக்களும், சிறந்த பல ஆயுதங்களையும், பலவர்ணமான பட்டாடைகளையும், பல தையல்விநோதங்களையும் வெள்ளியாலும் தங்கத்தினாலும் செய்த தகடிகளையும், இன்னும் அநேக விலையுயர்ந்த வஸ்துக்களையும் அவர்களுக்கு வெகுமதிகளாகக் கொ

டுத்தார்கள். மேலும் அவர்கள் தாங்கள் வெற்றிகொண்ட அரசர்கள் நாட்டியிருந்த ஜயஸ்தம்பங்களையெல்லாம் கொண்டுபோய்ச் சேர்த்தார்கள். இவ்வகையாய்ச் சேர்ந்த பல காட்சிப்பொருள்களெல்லாம் 1798-ம் ஞு வரையில் ஒழுங்கற்றுத் தலைகாலில்லாமல் போட்டுக்கிடந்தன. அதன்பிறகு ஒருவர் அதற்கு விசாரணைத் தலைவராய் ஏற்பட்டு அதை ஒரு விநோதக் காட்சிசாலையாய்ச் சீர்திருத்தினார். அதற்காகச் சிலர் அநேகம் அற்புதவேலைகளுக்கு உபயோகமான விருட்சவகைகளைக் கொடுத்து உதவினார். வளர்கிற விருட்சங்களையன்று, விதைகளும் வேர்களும், கிழங்குகளும் இலைகளும், கிளைகளும் கொடிகளும், கொட்டைகளும் பட்டைகளும், பூக்களும் பூந்தாதுகளும், காய்களும் கனிகளும், பலகைகளும் இன்னும் அநேகம் மாதிரிகளும் கொண்டுசேர்த்தார்கள். இத்தேசத்திலிருந்த வைத்தியசாலையின் சகாயத்தால் ஸ்தாவரசாஸ்திரத்தை நன்றாய்ப் படித்து ஒவ்வொரு வஸ்துவின் குணாகுணங்களையும் நன்றாய் அறிந்துகொண்டார்கள். சூலாஜி என்பவர் இத்தேசத்திலுள்ள பற்பல பக்ஷிகளுடைய மாதிரிகளையும் நாற்கால் ஜந்துக்களின் மாதிரிகளையும் தேடிக்கொடுத்ததுமன்றியில், அவைகளுடைய தன்மையையும் உபயோகங்களையும் திருஷ்டாந்தத்தோடுகூடச் சேகரித்துக்கொடுத்தார்.

அந்த இந்துதேசத்து விநோதசாலையில் வைத்திருந்த காட்சிகள் முற்காலத்தில் ஒன்றோடொன்று ஒவ்வாதவைகளாயிருந்தன. மேலும் முன்னாளில் அந்தச் சாலையை நன்றாய்ப்பார்த்த பெரியோர்கள் அந்தச் சாலை அவ்வளவு விநோதக்காட்சிகள் வைத்துக் காட்டுவற்குத் தகுதியானவிடமாய் இருக்கவில்லையென்று துணிவாய்ச் சொல்லுவார்கள். அங்கே ஐந்தாறு அறைகள்தான் இருந்தன. அதைச்சுற்றி மதில் எடுக்கப்பட்டிருந்தது. அது முதலில் பலபொருட்காட்சிசாலை என்று உத்தேசித்துக் கட்டப்படாமையால் அதற்குப் பொருந்தியிருக்கவில்லை. அதனால் அந்தச் சாலை வந்து பார்ப்போர்களுக்கு மனதில் ஓர் அற்புதத்தை உண்டாக்காமல் இருந்ததுமன்றி, அதில் விசாரணைத்தலைமை நடத்திவந்தவருக்கும் திருப்திகாமாயிருக்கவில்லை. காட்சிப்பொருள்களும் ஒழுங்காய்ச் சீர்ப்படுத்தப்படவில்லை. பல சித்திரவேலை, வர்ணவேலை, நாநாவர்ணவேலைப்பாடுகள், தந்தவேலை, தச்சுவேலை, கல்வெட்டுகள் இவை முதலிய பல சிற்பவேலைகளும்; வர்ணம்கொடுத்து அழகுசெய்த வைரக்கற்கள், முத்துக்கள், சிறந்த ரத்னங்கள், பொன் வெள்ளி முதலியவைகளால் செய்த பூஷணங்களும்; பட்டுப்புடவைகள், பட்டு வஸ்திரங்கள், தகடுகள், சிறந்த தாவளிகள், சால்வைகள் முதலான ஆடைவகைகளும் இவைமுதலியவெல்லாம் ஒன்றோடொன்று வேறுபாடில்லாமல் ஒன்றின்மேலொன்றாய்ப் பரப்பிக்கிடந்தன. இவைகள்மாத்திரமேயல்ல, மைசூரில் திப்புசுல்தான் அரசா

ண்டுவந்தகாலத்தில் தன் விநோதத்திற்காக ஓர் அற்புதமான வேங்கையொன்று வைத்துக்கொண்டு இருந்தான். அது இவ்விந்துதேசத்திலிருந்த விநோதங்களுள் வெகு ஆச்சரியகரமானது. அது ஒரு இங்கிலாந்துப் போர்ச்சேவகன்மேல் பாய்ந்து கடித்துப் பீறுவது போல மரத்தினால் செதுக்கி வெகு விநோதமாய்ச் சித்திரவேலைகளும் செய்யப்பட்டது. இதுவன்றியில் அதின் வயிற்றில் ஒரு யந்திரமுண்டு. மேலே வைத்திருக்கிற திறவுகோலை முடுக்கினால் புலி மனிதன்மேல் பாயும்படி உறுமுவதுபோலவும், அதைக் கேட்டு மனிதன் சிணுங்கி அழுவதுபோலவும் இரண்டுவகையாய் தொனி கிளம்பும். திப்பு தான் கண்டு களித்துவந்த இன்பமான விநோதங்களில் இதுவும்ஒன்று. அவன் ராஜாவாயிருக்கையில் புலி மனிதன்மேல் பாய்வதாகவும் அதைக்கண்டு பகைவர் புலம்புவதாகவும் நினைத்துப் பேரானந்தமடைவான். அந்தப் பெருமைபொருந்திய புலியையும் 1794-ம் வருடத்தில் சீரங்கபட்டணத்தில் திப்பு தோல்வியடைந்தவுடன் அவன் அரண்மனையில் இருந்து கொண்டுபோய் அச்சாலையில் வைத்தார்கள்.

இவ்விந்தியாவின் அரசாட்சியும் கம்பெனியாரைவிட்டு ராஜாங்கத்தில் சேர்ந்து அந்த உத்தியோகசாலையும் எடுபட்டுப்போனவுடன் இக்காட்சிகளையெடுத்து வெண்மாளிகை என்னும் இடத்திலுள்ள பைப்ஹௌஸ் என்கிற ஒரு பெரிய சாலையில் கொண்டுவைத்தார்கள். அவ்விடத்தில் வந்து சேர்ந்தவுடன் அந்தச் சாலை வரவர விருத்தியாய்க்கொண்டே வந்தது. டாக்டர் போர்பெஸ் வாட்சன் என்பவர் அதற்கு விசாரணைத்தலைவராயிருந்து அதைச் செம்மையாய்ப் பரிபாலித்துவந்தார். அப்போது இந்தியாவின் உற்பத்திகளை ராஜாங்கத்தாருக்கு அறிக்கைசெய்யவேண்டுமென்று அந்த உத்தியோகத்தையும் அவருக்கே ஏற்படுத்தினார்கள். அப்போது ராஜாங்கத்தாருக்கு எப்படியாவது நியாயமானவழியாய் இந்தியாவை பலப்படுத்தவேண்டுமென்பது அவசியமாயிருந்தது. பின்னல் சாமான்கள் காகிதம் முதலிய அநேக காரியங்களுக்குத் தக்கதான நார்வகைகள் அநேகமாய் இவ்விந்தியாவில் விளைகின்றனவென்பது அவர்களுக்கு நன்றாய்த் தெரியும். வயல்களில் பயிர் செய்யப்பட்டதானாலுஞ்சரி, அல்லது காடுகளில் கிடைத்ததானாலுஞ்சரி, சகலவிதமான நார்களும் எவ்வளவு விலைக்கு இங்கிலாந்தில் வாங்கக்கூடும் என்று நிதானிக்கவேண்டுவது அவசியம். முன்னே அதற்கு விசாரணைத்தலைவராயிருந்த டாக்டர் ராயல் என்பவர் அதை விருத்திபண்ணுவதற்காக அநேக காரியங்கள் செய்தார். இவ்விந்துதேசத்திலுள்ள நார்வகைகளையெல்லாம் சேகரித்து அவைகளின் குணங்களையும் ஒரு புத்தகத்தில் பிரசித்தப்படுத்தினார். முதலில் அவைகளை வெவ்வேறுவகையாகப் பிரித்து அவைகள் விளையும் பூமிகளையும், அவைகளைப் பயிர்செய்யும்

விதங்களையும், ஒவ்வொன்றுக்குமுள்ள வலிமையையும், அவை இந்தியாவில் விற்கக்கூடிய விலையையும் நன்றாய்த் தெரிவித்து இங்கிலாந்தில் அவைகள் இன்னின்ன வகையான கைத்தொழிலுக்கு உபயோகப்படுமென்பதையும், இவ்வளவு செலவழித்தால் அந்தச் சரக்குகள் இங்கிலாந்துபோய்ச் சேருமென்பதையும், இன்னும் அவைகளுக்கு உபயோகமான பல விஷயங்களையும் விவரமாய் எழுதிப் பிரசித்தப்படுத்தினார். அதன்படியே அந்தக் காட்சிசாலை பைப்ஹௌவில் வைத்திருக்கும்போது பலவகையான தினுசுகள் வரவழைத்து ஒழுங்காய் வைத்திருந்தார்கள்.

அந்தக் காட்சிசாலை பைப்ஹௌவில் வைத்திருந்த காலத்தில் இந்துதேசத்து உத்தியோகசாலை என்று ஒரு சிறந்தமாளிகை கட்டும்படி உத்தேசித்து, அப்படியே அநேகம் தொழில்கள் செய்ய உபயோகமாம்படி அதிக விசாலமாய் வெண்மாளிகை என்னும் இடத்தில் ஒரு சாலை கட்டினார்கள். ஆயினும் அப்போது கலகங்கள் உண்டாயிருந்ததனால் இந்தக் காட்சி வைக்கத்தக்கதாயும் இவ்விந்துதேசத்துப் புத்தகங்களைச் சேகரித்து சிறந்த புத்தகசாலை ஒன்று ஏற்படுத்தத்தக்கதாயும் விசாலமாய் அதைச்சார்ந்த ஓரிடம் கட்டக்கூடாமற்போயிற்று. பைப்ஹௌஸ் என்னும் இடம் வேறொரு காரியத்திற்கு அவசியமாய் வேண்டியிருந்ததனால் அதிலிருந்த காட்சிசாலையை அதைவிட்டு எடுத்துவிடவேண்டியதாயிற்று. அக்காலத்தில் ஏற்பட்ட ஒழுங்குப்பாடு சிறந்ததாயிருக்கவில்லை. அந்த உத்தியோகசாலையின் மேற்புறத்தில் பலகையறைகள் ஏற்படுத்தி அதிலே அவைகளை வைக்கும்படி ஏற்பாடாயிற்று. அதற்கு ஏறிப்போகவேண்டியவழி வெகு நெருக்கமாயிருந்தது. மேற்புறமெல்லாம் கண்ணாடியாலேயே மூடியிருந்தபடியால் பிரகாசமாத்திரம் அதிகமாயிருக்குமாயினும் காற்றுப்போக்கு இல்லாமையால் வெயிற்காலங்களில் தாபம் மிகவும் அதிகரிக்கும். அவ்விடத்தில் சென்ற 1875-ம் வு ஜூன்மீ 1உ வருஷாந்தக் காட்சிவைத்தார்கள். அதன் மேற்றளங்களெல்லாம் மேலே கண்ணாடியால் மூடப்பட்டிருக்கிறபடியால் நன்றாய்ப் பார்க்கத்தக்கவிடந்தான். அடிப்புறங்களுக்குமாத்திரம் ஒரு பக்கத்துப் பலகணி வாயில்களால்மாத்திரம் ஒளிவரவேண்டியிருந்ததனால் அவ்வளவு நன்றாயிருக்கவில்லை.

அப்போது அவர்கள் வைத்திருந்த பொருள்கள் எல்லாவற்றையும் வெளியில் காட்டவில்லை. இடமில்லாமையால் வெளியிற் காட்டாமல் அநேகம் உள்ளேயே போட்டுக்கிடந்தன. காட்சிப்பொருள்கள் முன்னிருந்ததைவிட அப்போது அதிகமாயிருந்ததுமன்றி, வரவர அதிகமாய்ச் சேர்ந்துகொண்டேயிருந்தன. இதனால் இவ்விந்துதேசத்திலுள்ள நானாவிதமான வஸ்துவகைகளும்

அவ்விடத்தில் போய்ச் சேர்ந்து இருக்கின்றனவென்று யாவர்க்கும் தெரியலாம். ராஜாங்கத்துக்குரிய சாமான்கள், வர்த்தகச் சாமான்கள், பயிர்த்தொழிற் சாமான்கள், வீட்டுவேலைக்குரிய சாமான்கள், அந்தந்த ஜாதிக்குரியவை மதத்துக்குரியவை முதலிய எவ்வகைச் சாமான்களும் அபரிமிதமாய் அவ்விடத்தில் நிறைந்திருக்கின்றன. இத்தேசத்தாருக்குரிய ஆயுதவகைகளில் துப்பாக்கி, சிறுதுப்பாக்கி, கைத்துப்பாக்கி, உடைவாள், குத்துவாள், ஈட்டி, வேல், கத்தி, கேடயம், மழுமுதலிய எல்லா ஆயுதங்களுக்கும் மாதிரிகள் காணலாம். கீதவாத்தியங்களுக்குரிய கருவிகளில் பேரி, தம்பட்டம்முதலிய பேரொலிவாத்திய முதற்கொண்டு வீணை தம்புருவரையிலுமுள்ள எல்லாவகைகளையும் காணலாம். ஹிந்துக்களும் மஹம்மதியர்களும் உடுக்கும் எல்லாவுடைகளும், அந்தந்த உடைகளாகவும், அதே அழகோடு சித்திரித்த படங்களாகவும் காணப்படுகின்றன. அவைகளுள் பட்டு, பருத்தி, சணல், உரோமம் முதலியவைகளால் நெய்யப்பட்ட பற்பலவித ஆடைகளின் மாதிரிகளையும் காணலாம். நார் விதைமுதலிய விருக்ஷவகைகளின் மாதிரிகளும், பிராணிவர்க்கம் தாதுவர்க்கம் இவைகளிலுண்டான பொருள்களின் மாதிரிகளும் வைத்திருப்பதைப்பற்றி முன்னமே குறித்துச் சொல்லியிருக்கிறோம். இவைகளோடுகூட இத்தேசத்தார் சாதாரணமாய்த் தினந்தோறும் உபயோகிக்கின்ற சாமான்கள் விசேஷமாய்க் காணப்படுகின்றன. பானைசட்டி அம்மி, குழவி, சொம்பு, தவலை, குடம் கூண்டிமுதலியவைகளும், காறு, கலப்பை, கத்தி, வாள், கோடரி, அரிவாள், கட்டைப்பார் முதலியவைகளும் விமானம், அம்பாரி, பல்லாக்கு, வண்டி, காடி முதலியவைகளும் அநேகமாயுண்டு.

இவ்வாறு சிறந்த காட்சிச்சாலை இடம் மாறுதலில்வளவோடு முடிவுபெறவில்லை. முதலில் ஈஸ்திண்டியா கம்பனியாரது வியாபாரசாலையிலிருந்து பைப்ஹௌஸ் (Fife house) என்னும் இடத்திற்குப் போயிற்று. அங்கிருந்து புதிதாய் கட்டிய இந்துதேச உத்தியோகசாலைக்குப் போயிற்று. சென்ற 1875–ஷுத்தில் அவ்விடம் விட்டு ஸௌத் கென்ஸிங்டன் என்னும் இடத்திற்கு வந்தது. அதுவும் கொஞ்சகாலம் குடியிருக்கத்தக்கவிடமேயன்றி நிலையன்று. இப்போது துரைத்தனத்தார் அவர்கள் சேகரித்துவைத்திருக்கும் எல்லாப் பொருள்களையும் ஒழுங்காய்க் காட்சிவைப்பதற்கும் இத்தேசத்துப் புத்தகசாலை வைப்பதற்கும் இன்னும் சிலகாரியங்களுக்கும் உபயோகமானதாய்ப் பெரிய சாலையொன்று கட்டும்படி யத்தனித்திருக்கிறார்கள்.

டாக்டர் போர்ப்ஸ் வாட்ஸன் என்பவர் இதை வர்த்தகப் பொருட்காட்சிசாலையாக்கவேண்டுமென்று சொல்லுகிறார். அதற்கு வேண்டிய சரக்குகளும் அநேகமாய் அவ்விடத்தில் சேர்ந்திருக்கி

ன்றன. இவ்விந்துதேசத்தில் உண்டான பலவகை நெசவுச்சரக்குகளுக்கும் மாதிரிகள் சேகரித்து அவைகளையெல்லாம் ஒரே அளவாய்த் துண்டித்து ஒழுங்குப்படுத்திக் கட்டிவைத்து இருக்கிறார்கள். அவை எழுநூறுக்கு அதிகமாய் இருக்கின்றன. அவைகளுள் ஒவ்வொன்றின் பக்கத்திலும் ஒவ்வொரு கடுதாசிசேர்த்து அவைகளில் அந்தந்த மாதிரிகளுக்கு ஆதாரமான நார்கள், உண்டாகுமிடம், அவை நெய்யுமிடம், அவைகளின் குணம், விளையுமிடத்தில் அவைகட்குள்ள விலைமுதலியவைகளெல்லாம் சுருக்கமாய் அச்சிட்டுக் காட்டியிருக்கின்றன. இவைகளோடு இத்தேசத்து ஜனங்கள் அநேகரை அவரவர்களுக்குரிய ஆடையழகோடு படமாய்ச் சித்திரித்துவைத்து இருக்கிறார்கள்.

இவ்வாறு இவ்விந்துதேசத்துச் சகல விநோதப்பொருள்களும் நிறைந்த காட்சிசாலையில், சென்ற 1875-ஹூத்தில் இத்தேசத்திற்குக் காட்சியளிக்கும்படி இவ்விடத்திற்கு விஜயஞ்செய்திருந்த நமது இளவரசராகிய பிரின்ஸ் ஆவ் வேல்ஸ் மகாப்பிரபு, இத்தேசத்துப் பிரபுக்களும் கனவான்களும் தமக்குப் பரிசாகக்கொடுத்த பொருள்களையெல்லாம் விநோதக்காட்சியாகக்கொண்டு வைத்திருக்கிறாராம்.

அதிர்ஷ்டஹீனனான மூராத்.

2-ம் பிரிவு.

முட்டாளுக்கு எப்போதும் ஏதாவது ஒரு சாக்கிருக்கும்.

துருக்கிதேசத்தரசன் வழக்கப்படி ஒருநாள் ராத்திரி தன் மந்திரியோடுகூட நகரசோதனைவருகையில்; மனிதர்க்குண்டாகும் ஆபத்து சம்பத்துக்கள் அதிர்ஷ்டவசமா அல்லவாவென்று வினவ, மந்திரி அல்ல; அவை, விவேகத்தாலுண்டாகின்றனவென்று சொல்லி, அதற்குத் திருஷ்டாந்தமாக ஒருவனைச் சுட்டிக்காட்டினான். அத்தருணத்தில் அம்மனிதன் புலம்பி அழுதுகொண்டிருப்பதுகண்டு அரசன் அவன் வீட்டண்டைபோய் நீ ஏன் துக்கிக்கிறுயென்று கேட்க, அவன், தான்பிறந்ததும் தனக்கு அதிர்ஷ்டஹீனனான மூராத் என்று பெயர்வந்ததும், தன் தம்பிக்கு பாக்கிய ஸாலதின் என்று பெயர்வந்ததும் இவ்வாறென்று சொல்லி, தன் தம்பி அதிர்ஷ்டவானும் தான் அதிர்ஷ்டஹீனனும் இருப்பதற்குக் காரணம் விவேகமும் விவேகமில்லாமையுமேயென்பது தோன்றத் தன் தம்பி எல்லாக்காரியத்தையும் விவேகத்தோடு செய்வதாயும், தான் விவேகமில்லாமல் தனக்குச் சிரசாக்கினையாகும்படியானகாரியஞ்செய்து தலைவாங்கக் கட்டக்கூடி இருந்ததருணத்தில் சந்துபார்த்துத் தப்பித்துக்கொண்டு ஓடிவந்துவிட்டதாயும் சொல்லியவளவு சென்ற சஞ்சிகையில் முடிந்தது; அவனுடைய மற்றக் கதையைப் பின்வருமாறு காண்க.

என் சீனுபாத்திரத்தை என் தம்பிவசஞ்செய்து, கான்ஸ்டாண்டிநோபில் நகரத்தைவிட்டுக் கொஞ்சந்தூரம் போகையில், ஒரு ராணுவத்தைக்கண்டு, அது ஈஜிப்துதேசத்திற்குக் கப்பலேறிப் போகவிருந்ததாக அறிந்து, நானும் அதைப் பின்தொடர்ந்தேன். நான் இறக்கவேண்டுமென்பது கடவுள் சித்தமானால் எவ்வளவு த்வாயில் நான் சாகிறேனே அவ்வளவும் நல்லதுதான் என்று எண்ணி என் உயிரைப்பற்றி எள்ளளவும் கவலையில்லாமல்,

அதைக் காப்பாற்ற அவசியமாய் வேண்டிய சாதனங்களைக்கூடத் தேட மனமில்லாமல் மிகச் சோம்பேறியாய்விட்டேன். கப்பல் யாத்திரைசெய்கையில் கப்பலின் மேல்தட்டில் பகல்முழுதும் சுங்கான்பிடித்தே உட்கார்ந்திருந்தேன். அப்போது ஒரு சண்டமாருதம் அடித்திருந்தால்கூட சுங்கானை வாயைவிட்டு எடுத்திருக்கவும்மாட்டேன்; என் பிராணனைக் காப்பாற்றிக்கொள்ள ஒரு கயிற்றைப் பிடித்திருக்கவும்மாட்டேன். இப்படிப்பட்ட சோம்பலுக்குக் காரணம் யாதெனில், தலைவிதியில் நான் வைத்திருந்த பலத்த நம்பிக்கைதான், ஆனால் அப்படிப்பட்ட தீங்கு ஒன்றும் நேரிடாமல் நாங்கள் க்ஷேமமாய்க் கரைசேர்ந்தோம். கப்பலைவிட்டு இறங்கும்போது ஸ்வல்ப அசந்தர்ப்பத்தினால் என்னுடன்கூட வந்தவர்களைவிட்டுச் சற்றுநேரம் பின்தங்கும்படி நேரிட்டது. அவ்வசந்தர்ப்பம் சொல்லத்தகுந்ததல்ல. எல் ஆரிஷ் என்னும் இடத்தில் அடித்திருந்த பாளயத்திற்கு நான் போனபோது ராத்திரி வெகுநேரமாயிற்று. வெண்மணல்மூடிய பாலைவனத்தில் பாவியிருந்த எண்ணிறந்த சிறுகூடாரங்களையும், தூரத்திலே சில பேரீச்சமரங்களையும், அப்போது காய்ந்துகொண்டிருந்த நிலவினால் செம்மையாய்க் கண்டேன். எங்கேபார்த்தாலும் நிச்சப்தமாயும் பயங்கரமாயும் இருந்தது. கூடாரங்களுக்குச் சமீபத்தில் புல்தின்றுகொண்டிருந்த ஒட்டைகளுடைய சந்தடிதவிர வேறொன்றும் என் காதில் படவில்லை. நான் போகையில் ஒரு மணிதப்பூண்டைக்கூடக் காணவில்லை. என் சுங்கானிலிருந்த நெருப்பு அணைந்துபோய்விட்டபடியால், ஒரு கூடாரத்தண்டையில் நெருப்பைக்கண்டு கொஞ்சம் விரைவாய் நடந்துபோகையில் பளபளவென்று பிரகாசித்த ஏதோ ஒரு வஸ்து என் கண்ணுக்குத் தென்பட்டது. அது ஒரு மோதிரம். அதை எடுத்து என் விரலில் போட்டுக்கொண்டிருந்து மறுநாட்காலையில் தமுக்குப்போடுவித்து அதற்குரியவனைக் கண்டுபிடித்து அதை அவனுக்குக் கொடுத்துவிட எண்ணி கிரகசாரம்போதாமல் அதை என் சுண்டுவிரலில் போட்டுக்கொண்டேன். அந்த மோதிரம் அவ்விரலுக்கு அதிக தளர்ச்சியாயிருந்தது. சுங்கானில் நெருப்புப் பற்றவைக்கப்போன த்வரிதத்தில் மோதிரத்தை நழுவவிட்டேன். கோவேறுகழுதை தின்றுகொண்டிருந்த செத்தையில் அதைத்தேட நான் குனிந்தபோது அந்தப் பாழும் ஜந்து என் தலையில் பலமாய் உதைத்ததால் நான் உரக்க ஊளையிடும்படி நேரிட்டது. அப்போது அக்கூடாரத்தில் தூங்கிக்கொண்டிருந்தவர்கள் விழித்துக்கொண்டு நித்திரைபங்கம் அடைந்ததற்காகக் கோபங்கொண்டு, அந்த மோதிரத்தை நான் திருடிவிட்டு அப்போதுதான் கண்டெடுத்ததாகப் பாசாங்கு செய்ததாக நினைத்து, அதை என்னிடத்திலிருந்து பலாத்காரமாய்ப் பறித்துக்கொண்டு மறுநாள் என்னை உள்ளங்காலில் தடியிட்டு அடித்துச்

சிலநாளைக்குமுன் காணாமல் போய்விட்ட மற்ற விலையுயர்ந்த நகைகளை மறைத்துவைத்திருந்த இடத்தைக் காட்டச்சொன்னார்கள். சுங்கானில் நெருப்புப் பற்றவைக்க அவசரப்பட்டதனாலும், அம்மோதிரத்தைச் சுண்டுவிரலில் போட்டுக்கொண்டதனாலும் அல்லவோ இதெல்லாம் எனக்கு நேரிட்டது! அதிர்ஷ்டஹீனனான மூடனைத் தவிர வேறொருவனும் இப்படிச் செய்யானே!

என் கால் காயம் ஆறி, எனக்கு நடக்கச் சக்தியுண்டானபிறகு, செகப்புக்கொடி பறந்துகொண்டிருந்த கூடாரங்களில் காப்பித்தண்ணீர் விற்கிறார்கள் என்று கேள்விப்பட்டு, ஒன்றுக்குள் புகுந்து காப்பித்தண்ணீர் குடிக்கையில், ஒரு விலையுயர்ந்த மோதிரத்தைத் தான் இழந்துவிட்டதாயும், அதைக் கண்டெடுத்துத் தன்னிடத்தில் ஒப்புவிக்கிறவர்களுக்கு இருநூறுபணம் வெகுமதிதருவதாக மூன்றுநாள் தமுக்குப் போடுவித்தும் அது தனக்கு அகப்படாமல்போனதாயும் என்பக்கத்தில் இருந்த ஒருவன் சொல்லக்கேட்டேன். கிரகசாரம்போதாமல் நான் கண்டெடுத்த மோதிரம் அவனுடையதாகத்தான் இருக்குமென்று ஊகித்து அவனுடன் வலியப்பேசி அதை என்னிடத்தில் இருந்து அபகரித்துக்கொண்டவனை அவனுக்குக் காட்டியபிறகு அவன் அதைப் பெற்றுக்கொண்டு நான் யோக்கியன்தான் என்று நம்பி, அவன்நிமித்தம் நான் அடைந்த அநியாய தண்டனைக்குக் கைம்மாறாக இருநூறுபணம் எனக்கு வெகுமதி அளித்தான்.

ஒருநாள் ராத்திரி நான் இருந்த கூடாரத்தில் படுத்திருந்த சிப்பாய்கள் எல்லாரும் அயர்ந்து நித்திரைசெய்கிறார்கள் என்று நினைத்து என் பணத்தைக் கொட்டி எண்ணிப்பார்த்து ஆநந்தமடைந்தேன். தங்களுடன்கூடி ஷர்ப்பத்து குடிக்கும்படி என் தோழர்கள் மறுதினம் என்னை அழைத்துப்போய், எனக்குத் தெரியாமல் அதில் எதையோ கலந்து அதை எனக்குக் கொடுத்தபடியால் பலத்த நித்திரைவந்து தூங்கிவிட்டேன். நான் விழித்துக்கொண்டபோது பாளயத்திற்குக் கொஞ்சதூரத்திலிருந்த ஒரு பேரீச்சமரத்தடியில் கிடக்கக்கண்டேன்.

எனக்குப் பிரக்கினைவந்தவுடனே நான் முதல்முதல் நினைத்தது என் பணப்பையைத்தான். அதை என் இடுப்பிலிருந்து அவிழ்த்துப்பார்த்தபோது அதில் ஒருகாசுகூட இல்லாமல் அது கூழாங்கற்களால் நிரப்பப்பட்டிருந்தது. எனக்கு ஷர்ப்பத்துகொடுத்த சிப்பாய்களே அப்பணத்தைப் பறித்துக்கொண்டிருக்கவேண்டும் என்று நம்பி, இவ்விஷயத்தை விசாரித்து நியாயந்தீர்க்கும்படி மேலான உத்தியோகஸ்தர்களைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டும் பிரயோஜனம் இல்லாமல்போயிற்று. தாங்கள் நிர்த்தோஷிகள் என்று அச்சிப்பாய்கள் சத்தியஞ்செய்துவிட்டபடியாலும், அவர்களுக்கு விரோதமாய் நேரான சாக்ஷியம் ஒன்றும் தென்படாத

தாலும் நான் செய்த தாவாவினால் எனக்கு நியாயங்கிடைக்காமல் போனதுமன்றி, என்னைக் கண்டோர் நகைக்கவும் பகைக்கவும் தலைப்பட்டார்கள். முதலில் நான் விசனத்தால் மெய்மறந்திருந்த போது "ஐயோ! அதிர்ஷ்டஹீனனுன மூராத்தே!" என்று நானே சொல்லிக்கொண்டேன். இப்பெரும் கதையும் அப்பாளயமுழுவதும் பரவினபிறகு அடிக்கடி என்னை இப்பேரிட்டழைத்தார்கள். தங்களுடைய சாதுரியத்தைக் காட்டும்பொருட்டு சிலர் என்னைக் கூழாங்கற்களைப் பையில் கட்டிவைத்திருந்த மூராத் என்று அழைத்தார்கள்.

அக்காலத்தில் வேடிக்கைக்காக இலக்குவைத்துச் சுடுவது துர்க்கியசேனையிலிருந்த சிப்பாய்களின் வழக்கம்; எங்கள் சேனையில் ஒழுக்கம் இல்லாததால் அவ்வபாயகாமான வழக்கத்தை நிறுத்த மேலான உத்தியோகஸ்தர்கள் முயன்றும், பிரயோஜனமில்லாமல் போயிற்று. அதனால் நேரிட்ட அபாயம் சாதாரணமாய்ப் போய்விட்டபடியால் அநேகர் இதைப்பற்றிக் கொஞ்சமேனும் கவனிக்கவில்லை; இக்கவலையில்லாத்தன்மை சிலருக்கு உடம்பு வணங்காத்தனத்தினாலும், மற்றவர்களுக்குப் புகையிலை அபினி இவைகளுடைய புகைச்சலால் உண்டான மயக்கத்தினாலும், என்னைப்போன்ற அநேகருக்குத் தலையெழுத்துப்படிதான் நடக்குமென்கிற நம்பிக்கையாலும் உண்டாயிற்று. தங்களுடன்கூட இருந்தவர்களில் யாராவது ஒருவன் குண்டுபட்டிறந்தபோது அவர்கள் சுங்கானை வாயைவிட்டு எடுத்தும் எடாமலே: "நம்முடைய காலம் கிட்டவில்லை, நாம் இறக்கக் கடவுள் ஆக்கினை இல்லை" என்றுமாத்திரம் சொன்னார்கள்.

அவர்களைப்பார்த்து, விதியைவெல்ல யாராலாகுமென்று நானும் நினைத்து: "நான் நாளையதினம் இருப்பேன் என்பது என்னநிச்சயம்? ஆகையால், இன்றையதினமே அனுபவிக்கக்கடவேன்" என்று எண்ணி அதுமுதல் கூடியமட்டில் போகத்தையே அனுபவிக்கப் பிரதிதினமும் முயன்றேன். ஆசைதீர அனுபவிக்கிறதற்கு என் தரித்திரம் தடையாய் இருக்கலாமென்று நீங்கள் நினைப்பீர்கள். ஆனால், நான் கடனுவது வாங்கிச் செலவழிக்க ஆரம்பித்தேன்; அச்சேனையோடு வந்த சில யூதேயர்கள் அது ஜயமடையுமென்று நம்பி சிப்பாய்களுக்கு அநியாயவட்டிக்குக் கடன்கொடுத்து வந்தார்கள். நான் கடன்கேட்ட யூதேயன் என் தம்பியின் நடத்தையையும் விருத்தாந்தத்தையும் அறிந்திருந்தபடியால், நான் போரில்மாண்டாலும் அவன் என் கடனைத் தீர்ப்பானென்று நம்பி எனக்கும் கடன்கொடுத்தான். அப்பணத்தைக்கொண்டு காப்பித்தண்ணீரும், அபினியும் விடாமல் வாங்கிவந்து அவைகளின்மேல் மட்டுமிஞ்சின ஆசையுள்ளவனுய், அவைகளாலுண்டான சித்தப்பிரமையால் அநுவனாயில் எனக்கு நேரிட்ட துன்பங்களையும் அதற்

கப்புறம் என்னநேரிடுமோ என்கிற பயத்தையும் முற்றிலும் மறந்துவிட்டேன்.

நான் ஒருநாள் வழக்கத்திற்குமிஞ்சி அதிக அபினிசாப்பிட்டு பயித்தியக்காரனைப்போல் ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் நான் அப்போது அதிர்ஷ்டஹீனனான மூராத் அல்லவென்று சொல்லிக்கொண்டும் உல்லாசமாய்த் திரிகையில், சுபாவபுத்தியோடு என் ஆட்டத்தையும் பாட்டத்தையும் பார்த்துக்கொண்டிருந்த ஒரு நேசன் என் கையைப்பிடித்து இழுத்து, "இலக்குவைத்துச் சுடுகிற அச்சிப்பாய்களை நீ பார்க்கிறாயோ இல்லையோ? அவர்களில் ஒருவன் உன் தலைப்பாகையைப்பார்த்து வேணுமென்றே இலக்குவைத்ததைக் கண்டேன். அதோ அவன் மறுபடியும் துப்பாக்கியைத் தாணிக்கிறான் பார்" என்று சொன்னான். நானோ: நீ நினைத்துக்கொண்டிருக்கிற பாவி நானல்ல; அதிர்ஷ்டஹீனனான மூராத் நானல்ல" என்று பலமுறை சொல்லிக்கொண்டே எனக்கும் புத்திசொன்னவனோடு போராடிக்கொண்டிருக்கையில் அவன்மட்டும் அபாயத்திற்குத் தப்ப ஓடினான். நானோ அங்கேயே நின்றேன்; பிறகு சில வினாடிக்கெல்லாம் என்மேல் ஒரு குண்டுபாய்ந்து, ஸ்மரணை தப்பி மணலில் விழுந்தேன்.

கைபடியாத ஒரு ரணவைத்தியன் என் தேகத்தை அறுத்து அந்த குண்டை எடுத்தபடியால் வேண்டியதைவிடப் பத்தத்தனை நோவு அவன் எனக்கு உண்டாக்கினான். சிலமணிநேரத்திற்குள்ளாக அச்சேனை பாளையத்தைவிட்டு புறப்படவேணுமென்று அப்போதுதான் உத்தரவாயிருந்தபடியால் அவன் அக்காலத்தில் அதிக அவசரப்பட்டான். பிழைக்கமாட்டார்கள் என்று நினைக்கப்பட்டிருந்தவர்களோடு என்னையும் அவ்விடத்திலேயே விட்டுவிடுவார்களோ என்கிற பயத்தினால் என் வேதனை அதிகரித்தது.

அன்றையதினம் எனக்கு ஜ்வரம் மும்முரமாய் அடித்தது. நான் படுக்கையைவிட்டு நகரக்கூடாதென்று எனக்கு உத்தரவாயிருந்தும், எப்போதும்போல் சுவபாவமாய் சோம்பிக்கிடக்கிற வழக்கத்தைவிட்டு, இன்னம் பிடுங்கப்படாதிருந்த கூடாரங்கள் இத்தனையென்றும், போகாமலிருந்த சிப்பாய்கள் இத்தனையென்றும் அறியும்பொருட்டு, நல்ல உருமத்தில்கூடப் படுக்கையைவிட்டெழுந்து கூடாரத்தைவிட்டு வெளியேபோனேன். வைத்தியன் உத்தரவுப்படி நடந்திருந்தால், சிதறிப்போய்ப் பின்தங்கின சிப்பாய்களிலும் பின்தாங்கினவர்களோடாவது நானும் போகும்படியான ஸ்திதியிலிருந்திருக்கலாம். சில நோயாளிகளை எடுத்துப் போனதுபோல் என்னையும் ஒரு டோலியில் தூக்கிக்கொண்டு போனால் பொறுத்திருப்பேன்; ஆனால் சாயந்திரம் வைத்தியன் வந்தபோது நான் அப்புறப்படத்தகாத ஸ்திதியிலிருந்தேன்.

பின்படையாகச் செல்லவிருந்த சில சிப்பாய்கள் மறுநாட்காலையில் என்னை அழைத்துப்போகவந்தார்கள். அவர்கள் என்னை ஒரு கோவேறுகழுதையின்மேல் ஏற்றப்பார்த்தார்கள். நான் மோதிரத்தைத் தேடுகையில் என்னை உதைத்த யாழும் ஜந்து இதுதான் என்று அதன் முதுகிலிருந்த ஒரு வெள்ளைக்கோட்டால் அறிந்தபடியால் அதன்மேல் ஏற எனக்கு மனந்துணியவில்லை. என்னைத் தூக்கிக்கொண்டு போகும்படி நான் அவர்களை வேண்டிக்கொண்டதின்மேல் அவர்கள் என்னைக் கொஞ்சதூரம் எடுத்துக்கொண்டுபோய் த்வரையில் ஆயாசமடைந்து, தாங்கள் ஒரு ஊற்றுக்குழிக்குப்போய் ஜலம்மொண்டுவருவதாகப் பாசாங்கு செய்து என்னை மணலில் படுக்கவிட்டு தாங்கள் திரும்பிவருகிற வரையில் அசையாமல் படுத்திருக்கும்படி என்னைக் கட்டளையிட்டுப்போனார்கள்.

வறண்டுபோன உதடுகளை நனைக்கத்தவித்து வெகுநேரம் நான் காத்திருந்தும், தண்ணீரும் வரவில்லை; போன சிப்பாய்களும் திரும்பிவரவில்லை. பிரதிநிமிஷமும் என் சாவை எதிர்பார்த்துக்கொண்டு சிலமணிநேரம் அங்கே கிடந்தேன். எனக்குக் காலம் கிட்டியதென்றும், நான் இறந்து நாய் நரியைப்போல் புதைக்கப்படாமல் கிடக்கவேணுமே என்றும் விசனப்பட்டேன்.

நான் படுத்துக்கிடந்த இடத்திற்குச் சமீபத்தில் ஒரு சிறு அங்கிலேய சைன்னியம் போயிற்று. அதில் சிலர் என் புலம்பலைக்கேட்டு எனக்கு ஒத்தாசைசெய்ய உருக்கத்தோடு வந்தார்கள். அவர்கள் என்னை எடுத்துப்போய் என் ரணத்தை ஆற்றி அத்தியந்தபக்ஷம் பாராட்டினார்கள். மறுபடி எனக்குத் திருடம்வந்தும் வராததற்குமுன்னமே என்மீது புது ஆபத்துகளை வருவித்துக்கொண்டேன். அப்போது உஷ்ணகாலம்; எனக்கோ தாகம் மட்டுமிஞ்சியிருந்தது. நீரூற்று கண்டுபிடிக்கலாமென்று எண்ணி சிலரோடு நானும் வெளியேபோனேன். அவர்களுக்குள் மண் கல் முதலிய தாதுவர்க்க சாஸ்திரம்படித்த ஒருவன் காட்டிய இடத்தில் அவர்கள் கிணறு தோண்ட ஆரம்பித்தார்கள். அப்படிக் கஷ்டப்பட்டு உழைப்பானேன் என்று எண்ணி, நீர்க்குட்டையைப்போல் தோற்றின ஏதோவொன்றைத் தூரத்தில் கண்டு அங்கே தண்ணீர் இருப்பதாக என்னுடன் கூடவந்தவர்களுக்குக் காட்டினேன். அப்படிப்பட்ட மோசக்காக்ஷியை நான் நம்பக்கூடாதென்றும், அது அந்நாட்டில் தென்படுவது சாதாரணந்தான் என்றும், நான் அங்கேபோனால் தண்ணீரைக் காணமாட்டேன் என்றும் நான் அதை நோக்கிச் செல்லச்செல்ல அது தூரத்திலிருக்கிறாப்போலவே தென்படுமென்றும், அதைத் துரத்திப்போனால் வெகுசாய் அந்தப் பெருமணல் பிராந்தியத்தில் வழிதப்பிப்போய் சிக்கிக்கொள்ளுவேன் என்றும் அந்த சாஸ்திரிகள் எனக்கு ஒரு துபாசிமூலமாய் அறிவித்தார்கள்.

நான் அவன் சொன்னபுத்தியைக் கேளாமலே அந்தக் காக்ஷியைப் பின்தொடர்ந்து சென்று, அலைச்சல்பட்டு, நான் ஜலமென்று எண்ணியது உண்மையாகவே கானல்தானென்று கடைசியில் கண்டறிந்தேன். நான் ஆயாசத்தினால் சோர்ந்து, விட்டுப்பிரிந்த என் தோழர்களைக்காணத் திரும்பிப்பார்த்தபோது என் கண்ணுக்கு மனிதர்களாவது ஜந்துக்களாவது அகப்படவில்லை. மணலில் படிந்திருந்த என் காற்சுவடுகளை அடையாளம்வைத்து மெல்லத் திரும்பிப்போகையில் இளங்காற்று வீசத்தொடங்கினவுடனே அதனாலுண்டான அபாயத்தை அறியாதவனாய் அதைக் கண்டு களித்து அது என்மேல் படும்படி என் மார்பிலிருந்த துணியை வாங்கினேன். மணலில் படிந்திருந்த கால்அடிச் சுவடுகள் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் மறைந்துபோய்விட்டதைக் கண்டு நான் அதிக திகில்பட்டேன். எந்தவழி போகிறதென்று எனக்குத் தெரியவில்லை. நான் நிராசையாய்ப்போய் என் துணியைக் கிழித்துக்கொண்டு தலைப்பாகையை விசிறி எறிந்துவிட்டு உரக்கக்கூவியும் ஒருவரும் பிரதித்துவனி கொடுக்கவில்லை. நான் சாப்பிட்டு வெகுநேரமாயிருந்ததால் அப்போது நான் மிக்க ஆயாசமடைந்து சோர்ந்திருந்தேன். என் தலைப்பாகையின் மடிப்பில் கொஞ்சம் அபினி சொருகிவைத்ததாக எனக்கு ஞாபகம் வந்து என் தலைப்பாகையை எடுத்துப்பார்த்தபோது அந்த அபினி எங்கேயோ விழுந்துபோயிற்றென்று கண்டு, அதை எறிந்த இடத்தில் தேடியும் அது எனக்கு அகப்படவில்லை.

தாகத்தினாலும் பசியினாலும் உஷ்ணத்தினாலும் நான் பட்ட வருத்தம் சொல்லிமுடியாது. அப்போது எனக்கு ஒருவித மூர்ச்சையுண்டாயிற்று. எவ்வளவுநேரம் இந்த ஸ்திதியிலிருந்தேனோ எனக்குத் தெரியாது. ஆகிலும் மெக்காநகரத்திலிருந்து திரும்பி வந்துகொண்டிருந்த பிரயாணவர்த்தகக் கூட்டத்தைச்சேர்ந்தவர்களில் சிலர் செய்த உரத்த கொக்கரிப்பினால் எனக்குப் பிரஞ்ஞைவந்ததாக ஞாபகமிருக்கிறது. அப்பாலைவனப் பிராந்தியத்தில் அவர்கள் நன்றாய் அறிந்திருந்த ஒரு ஊற்றண்டையில் க்ஷேமமாய் வந்து சேர்ந்த சந்தோஷத்தினால் அவர்கள் அப்படி கொக்கரிப்புக் கொட்டினார்கள்.

நான் கிடந்த இடத்திற்கும் அந்த ஊற்றுக்கும் நூறுகஜ தூரம்கூட இல்லை. பொய்க்காக்ஷியை வெகுநேரம் துரத்திப்போன அதிர்ஷ்டஹீனனான மூடனாத் உண்மையான ஜலம் இருந்த இடத்தைப்பார்க்கத் தப்பிப்போனதும் அவன் கிரகசாரந்தான்! நான் திடமும் ஊக்கமும் அற்றிருந்தும் உதவிபெறலாமென்று எண்ணி என்னால் கூடியமட்டில் உரக்கக்கூவினேன். அவர்களுடைய தொனி வந்ததிசையை நோக்கி மாரால்நகர எத்தனித்தேன். அடிமைகள் தோல்பைகளில் தண்ணீர் நிரப்பும்பொருட்டும் ஒட்டைகள் வேண்

டிய அளவு நீர் குடிக்கும்பொருட்டும் அவ்வர்த்தகர்கள் அங்கே நெடுநேரந்தங்கினார்கள். நான் மிக்க பிரயாசைப்பட்டு மெல்ல நகர்ந்துபோகையில் அவர்கள் ஒட்டைகளின்மேல் ஏறினதைக் கண்டு என் தலைப்பாகையைக் கழற்றி அதை அவிழ்த்து ஆகாசத்தில் வீசினேன். நான் செய்த சவுக்கினையைக்கண்டு அவர்கள் என்னை நோக்கிவந்தார்கள்.

பேசுவதற்குக்கூட எனக்குச் சக்தி போதாமலிருந்தது. ஒரு அடிமை எனக்கு வார்த்த தண்ணீரைக் குடித்தபிறகு நான் இன்னானென்றும், அவ்விடத்தில் வந்த வழியும் அவர்களுக்கு விளங்கச்சொன்னேன். நான் பேசிக்கொண்டிருக்கையில் அவர்களில் ஒருவன் என் அரைக்கச்சிலிருந்து தொங்கிக்கொண்டிருந்த பணப்பையை உற்றுப்பார்த்தான். போக்கடித்துபோன மோதிரத்தை என்னால் திரும்பப் பெற்றுக்கொண்ட வர்த்தகன் எனக்குப் பணத்தோடு அளித்திருந்த பை அதுவேதான். எனக்கு உபகாரஞ்செய்திருந்தவருடைய நாமத்தின் முதலெழுத்துகளும் மகமதிய வேதபுஸ்தகத்திலிருந்து எடுக்கப்பட்ட ஒரு வாக்கியமும் அப்பையின்மேல் எழுதப்பட்டிருந்தபடியால் நான் அதைப் பத்திரமாய்க் காப்பாற்றிவைத்திருந்தேன். மேலும் ஒருவேளை வேறெந்த தேசத்திலாவது நான் அவரை மறுபடி சந்தித்தால் இவ்வடையாளத்தால் அவர் என்னை அறியவேணுமென்று அதை எனக்குக் கொடுத்தபோது சொல்லியிருந்தார். அப்போது அந்தப் பையைக் கவனமாய்ப்பார்த்தது அவருடைய சகோதரன். அது எனக்குக் கிடைத்தவழியை நான் அவனுடன் சொன்னபோது அவன் என்னை ஆதரிக்கத் தயவுகூர்ந்தான். காயிரோ நகரத்திற்குப் பிரயாணமாய்ப் போய்க்கொண்டிருந்த வர்த்தகர்களில் இவனும் ஒருவன். அவன் என்னைத் தன்னுடன் அழைத்துப்போவதாகச் சொன்னதின்மேல் அவனுடைய அடிமைகளைப்போலவே நானும் நன்றியோடு அவனுக்குப் பணிவிடைசெய்ய வாக்குதந்து, அவன் சொன்ன ஏற்பாட்டுக்கு மனசார ஒத்துக்கொண்டேன். அவ்வர்த்தகர்கள் சென்றபோது என்னையும் அழைத்துப்போனார்கள்.

சமாசாரம்.

மால்டா என்னும் தீவிலுள்ள விந்தையான நாய்கள்.—உலகத்தில் மனிதர்களைப்போலப் பதார்த்தங்களைப் பகுத்தறிகிறகுணமும், பிறர் சொல்லுவதைக் கேட்குந் திறமையும் மிருகங்களுக்கு இல்லையென்று ஒருவேளை நமக்குத் தோன்றலாம். நன்றாய் ஆராய்ந்துபார்த்தால் சில மிருகங்களும் மனிதர்களைப்போலவே விவேகம் உடையவைகளாய் இருக்கின்றன. மால்டா என்னும் தீவிலே சில நாய்கள் மனிதர்களைப்போலவே எல்லாக்காரியங்க

ளையும் தாமே அறிந்துகொண்டு நடத்துகின்றன. அவைகளுள்
ஒருநாய் யாவரும் கண்டு வியக்கத்தக்க அற்புதச்செயல்களைச்
செய்ய அநேகர் கண்டிருக்கிறார்கள். அந்த விநோதமான சிறு
ஜந்துவானது நீண்டு பட்டுபோல் மெதுவான மயிரும், காய்ச்சின
மணல்போன்ற நிறமும், கறுத்து அகன்ற கண்களும், நீலநிறமுள்ள
நாசியும், சிறிய நேர்த்தியான உள்ளங்கைகளையும் உடையது. அதை
ஜர்மனிதேசத்துத் துரைசானியொருத்தி வளர்த்துத் தான் சொ
ல்வதையெல்லாம் அறிந்துகொண்டு உள்ளபடி நடத்தும்படியாக
எல்லாவிஷயங்களையும் அதற்குக் கற்பித்துக்கொடுத்தாள். அந்த
நாயானது நமது விக்டோரியா மஹாராணியார் சன்னிதானத்திற்
கும், இன்னும் ஐரோப்பாவிலுள்ள பற்பல ராஜாக்கள் கனவான்
கள்முதலிய பல மேலானவர்களிடத்திற்கும் போய்வந்தது. அவர்க
ளெல்லாரும் அதன் சாமர்த்தியத்தைக் கண்டு வியந்து தத்தமக்குத்
தக்கபடி வெகுமதிசெய்தனர்.

ஒன்றுமுதல் ஆயிரம்வரையில் கணக்குள்ள சீட்டுகளை ஒரு
மேசைமேல் தாறுமாறாய்ப் பரப்பி அங்கே அந்த நாயைக்கொண்டு
விட்டு பிறகு யாராவது இத்தனையாவது எண்ணுள்ள சீட்டைக்
கொண்டுவாவென்று ஏவினால், அது கம்பீரமாய் அச்சீட்டுகளைப்
பார்த்துக்கொண்டே இக்கோடிக்கக்கோடி நடந்து கடைசியாய்
அவன் கேட்ட கணக்குள்ளசீட்டை வாயினால் கவ்விக்கொண்டுவ
ந்து கொடுக்கும். இந்த நம்பருக்குக் கூட்டல்தொகை, கழித்தல்தொ
கை, பெருக்கல்தொகை, வகுத்தல்தொகை இவைகளென்னவென்று
கேட்டால் உடனே எடுத்துத்தரும். பத்தாவதுகணக்குள்ள சீட்டை
க்கொண்டுவாவென்று கேட்டால் அந்த நாய் அச்சீட்டு அகப்படும்
அளவும் ஒவ்வொன்றாய்த் தேடி அது அகப்பட்டஉடனே எடுத்
துக்கொண்டுவரும். அப்படியே இருபதுக்குவேண்டிய கூட்டல்
எண்கள் எவையென்றால், அதற்குச் சரியான கணக்குகளைக்கொண்
டுவருமேயன்றி, அதுவன்று இதுதான் என்று பலர் தடுத்தாலும்
வேறொன்றையும் தொடாது. இவ்வகையாக அது அவரவர்களி
ஷ்டப்படி எல்லாக்காரியங்களையுஞ்செய்து அததற்குத்தக்கபடி பரி
சுபெறும். இதுவன்றியில் அதற்குஎதாவது ஒரு கடிகாயந்திரத்தைக்
காட்டிவிட்டால் அதன்படி சரியாகக் காலவளவை குறிக்கும். இப்
போது பத்துமணியும் பதினைந்து நிமிஷமுமென்று அறிவிக்கவேண்
டுமானால், அதற்கு முதலில் பத்து என்னும் சங்கியையுள்ள சீட்டை
யும் பிறகு பதினைந்தாவது கணக்குள்ள சீட்டையும் எடுத்துக்கொ
டுக்கும். பலபேர்களுடைய பிரதிமைகளை அதற்குக் காட்டிக்கொ
டுத்தபின்பு, இது யாருடையதென்று கேட்போமாகில் இன்னாரு
டையதென்று விவரமாய்க் காட்டும்.

Printed at the C. K. S. Press.